



ஓலை 92 | ஓசை 215 | அக்டோபர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை




அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்

## பொருள்

ஒருவன் முகத்திற்கு எதிரே முகதாட்சணியம் இல்லாமல் பேசினாலும், அவன் எதிரில் இல்லாமல் இருக்கும்போது பின்விளைவை எண்ணாமல் அவனைப் பற்றிப் பேச வேண்டா

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## ஐயம் புகினுஞ் செய்வன செய்!

### பாவகை: நிரையசைக் கட்டளைக் கலிப்பா

நிலத்தைப் பற்றிடா வேரினால் மரமும்
நிலத்தில் விழுந்திடும்; நற்செய லாகும்?
நிலத்தில் நிலைக்கா நிலையிலோ ஐயம்
நீக்கி நற்செயல் செய்தலே நயன்மையே;
கலத்தில் நின்றுமே ஐயமும் வந்துமே
கலக்கம் நீக்கியே செய்வதைச் செய்கவே;
அலகுங் கொண்டுமே மரங்கொத் தியென
அரணாய் நின்றே அரும்பணிச் செய்கவே!




மலையும் சூடிடும் கொண்டலாம் பூவினால்
மல்லிப் போலவே மணந்திட ஆகுமோ?
நிலைத்தி ருக்கு(ம்) இருளினை விரட்ட
நினைத்தே விளக்கது ஐயமும் கொண்டால்
கலைய ழகென கனிந்தே சிறக்கும்?
கரைந்தே நல்வினைச் செய்திட தண்ணொளி
நிலைத்தே வாழ வழியுமே பிறக்கும்;
நிலையாய் ஓடிடும் ஆறதின் செயலே!




இலையைப் பூவினைக் காயினைக் கனியை
இரக்கங் கொண்டுமே ஈந்திடா மரமாய்,
தலையில் ஐயமும் ஓங்கிடச் செய்திடும்
தமதின் செயலை நீக்கிட சீர்மையின்
நிலையு யர்த்திட யாரினா லாகுமோ?
நெஞ்சம் முழுதும் இரக்கமும் வன்மையும்
இலையே என்றிட காலமும் கண்துளி
எமதின் மிச்ச உடமையாய்ப்! போகுமே!

* நிரையசைக் கட்டளைக் கலிப்பா - இலக்கணக் குறிப்பு
நேரசைக் கட்டளைக் கலிப்பாப் போல, இப்பாடலும் அமையும். நான்கடிகள் எட்டு வரிகள் என்று நான்கு நான்கு சீர்களாக பிரித்து எண்சீர் மண்டிலம் போல எழுத வேண்டும். மெய் நீக்கிப் பன்னிரண்டு எழுத்துக்கள் வரவேண்டும். ஒவ்வோரடியையும் நிரையசையில் தொடங்க வேண்டும். நான்கடிக்கும் ஓரெதுகை, முதல் சீருக்கும் ஐந்தாம் சீருக்கும் மோனை அமைய வேண்டும். மா + விளம் + விளம் + விளம் என்ற வாய்பாட்டில் கூவிளம் மட்டும் வந்தால் சிறப்பு. ஈரசைச் சீர்களாக இருக்க வேண்டும். பாட்டு முடியும் போது ஏகாரத்தில் முடிதல் வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# அன்பே கடவுள்

**பா வகை : அறுசீர் மண்டிலம் (மா+ மா + காய்)**

அன்பே நமது
அறமாமே
ஆன்றோர் உரைத்த
ஆஞ்ஞையிதே.

அன்பே என்றும்
அகிலமாளும்
அன்பை அகழ
அருளாகும்.

அன்பைக் கொடுத்தே
ஐதுபடு.
அன்பை நிறைத்தல்
ஆற்றலாமே.

அன்மை தன்னை
அகற்றிடுமே
அன்ன தன்மை
அன்பிற்கே.



*****************************

*அருஞ்சொல்

அன்மை-தீமை.
எக்களிப்பு-மிகுமகிழ்ச்சி.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# மறவம் காத்தல் மாண்பு

பா வகை: கழி நெடிலடி ஆசிரிய எழுசீர் மண்டிலம்.
(விளம் +மா+ விளம்+ மா- ஒரு வரியாகவும்,
அடுத்த ஒரு வரி விளம் + விளம்+ மா- வாகவும் வரும்.)

**மொழிதனை நாமும் விழியெனக் காப்போம்;**
**மொழிந்துமே தமிழினை வளர்ப்போம்;**
**பழிதனைப் போக்கும் வலிமையும் கொள்வோம்;**
**பைந்தமிழ் இனிமையைச் சுவைப்போம்;**
**விழியெனக் காத்தே வெளிச்சமும் கொடுப்போம்;**
**வீறுகொண் டெழுந்துமே நடப்போம்;**
**வழிகளில் மலர்கள் பூத்திட வாழ்வில்**
**வலிமையும் கொண்டுமே ஆள்வோம்!**




கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# மணிமேகலை (இருபத்தி ஒன்பது)

28. கச்சி மாநகர் புக்க காதை. (பாகம் இரண்டு)

காஞ்சிமாநகர் மழையின்றி வறுமை
பஞ்சத்தில் மக்கள் பசியில் வாடுகின்றனர்
கொஞ்சமும் தாமதமின்றி அங்கே செல்வாயாக
காஞ்சி மக்கள் பசிப்பிணி போக்குவாயாக

திருந்திய பாத்திரம் செங்கையின் ஏந்திக
மருங்கின் வடதிசை வானத்து இயங்கித்
தேவர் கோமான் காவல் மாநகர்
நடுநகர் எல்லை நண்ணினள் ; இழிந்து

தொடுகழற் கிள்ளி துணையிளங்கிள்ளி
பாடுபட்டு புத்தனுக்கு கோயில் அமைத்தான்
தேடிவந்து கோயிலை வணங்கினாள் மேகலை
நாடிநின்ற மலர்ச்சோலையை அடைந்தாள்
( துணை : தம்பி )
மாநிலம் காவல் ,கஞ்சுகன் அரசனிடம்
கோவலன் மகள் துறவறம் பூண்டவள் ,
நாவலந் தீவிலே புகழ் பெற்றவள்
காவல் தெய்வமாக வந்து இருக்கிறாள்
( கஞ்சுகன் : அரசுப் பணியாளன் )

அது கேட்ட மன்னன் மகிழ்ந்தான்
புதுப் பொலிவுடன் காணச்சென்றான்
அதுபொழுது அமுதசுரபியுடன் நின்றாள்
எதுவாயினும் கூறுவதைக் கேள் என்றான்

"நல்லறம் மேவிய நங்கையே வணக்கம்
மெல்ல மழையின்றி பஞ்சத்தில் நாடு
நல்ல காலம் அமுதசுரபியுடன் வந்தாய்
பல்லவன்போல் பசிப்பிணி போக்குவாய்"

மக்கள் பாடிப் புகழ்ந்தனர் மேகலையை
தக்க தருணத்தில் செய்த உதவியல்லவா
மகேசனின் கடமை பஞ்சம் தீர்ப்பது
ஊக்கமலித்தாள் உணவு கொடுத்தாள்

வேந்தன் அவளுக்கு கடன் பட்டான்
புத்தனுக்கு கோயில் அமைத்து புனிதமானான்
வந்த இடத்தில் மாமணி பல்லவம்
பொய்கையும் சோலையும் உண்டாக்கினான்

சிறந்த உணவை மக்களுக்கு அளித்தாள்
அறத்தின் பயன் நாடு பெற்றது
திறந்த புத்தகமானது காஞ்சி மாநகர்
மறக்க முடியுமா அவள் சேவையை

மாதவி சுதமதி அறவணடிகள் வந்தனர்
மாதா மற்றும் அவர்களை வணங்கினாள்
சாதனை படைத்த மகளால் பெருமிதம்
மாதவம் புரிந்த மேகலையை பாராட்டினர்

(பாகம் முற்றும்)



தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# அப்பா

உன் உயிரினில் உதிரத்தில்.
ஒரு பாகமாய்
என்னை உருவாக்கினாய்.

உன் வயிற்றினில்
ஈரைந்து மாதங்கள்
சுமந்து என்னை
பெற்றெடுக்கவில்லைதான்.

ஆனாலும்
நான் உருவான
நொடி முதல்
உன் நெஞ்சினில்
சுமக்கின்றாய்
ஆயுள் முழுவதும்
சுகமாய்.

உன் தாயே
வந்து பிறந்ததாய்
என்னை பார்க்கும்
உன் விழிகள்.

கடவுளே
தந்தையின் வடிவில்
வந்ததாய் நோக்கும்
என் விழிகள்.



அதட்டுவதே அதிகம் என
அடிப்பதை தள்ளி வைப்பாய்.

இப்படித்தான் ஆகவேண்டும்
என்று திணிக்காமல்.
என் விருப்பத்தில்
என்னை செதுக்கினாய்.

விதியின்படி
பெண்பிள்ளையான நான்
மருமகளாய் வேறிடத்தில்
அடிவைத்து புதுமனை புக.

ஆதியும் அந்தமுமான
என் மகாலக்ஷ்மி
என்னை பிரிந்தாள் என
துயர்கொள்ளும்
தகப்பன்சாமி நீயே!

முற்பிறவியில்
நான் செய்த பலனாய்
தந்தையெனும் ரூபத்தில்
வந்த தெய்வமே.
உள்ளத்தால் என்றும்
உன்னை மறவாத
உன் அன்பு மகள்.

கவிஞர் தர்ஷினிசிம்பா

# கொண்டாட்டம்

என்னைத் தலையில்
வைத்துக் கொண்டாடும்படி
உங்கள் யாரையும்
நான் பணிக்கவில்லை.
நானே என்னை
கொண்டாடிக் கொள்கிறேன்.
தற்போது தேவைப்படுகிறது
எனக்குக் கொண்டாட்டம்.

இதனால் உங்களுக்கு
இழப்புமில்லை
பாதகமுமில்லை.
முடிந்தால் வாழ்த்துங்கள்.
இல்லையெனில் கண்டும்
காணாமல் சென்றிடுங்கள்.
பின்னால் என்னை
வசை பாடித் திரியாதீர்கள்.



உங்களிடம்
ஒன்றை மட்டும்
சொல்லிக் கொள்ள
ஆசைப்படுகிறேன்.
உங்களால்
என்றென்றைக்கும்
கொண்டாடப்பட வேண்டிய
கவிஞன் நான்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பொருள் செயல்வகை

## அதிகாரம் : 76

மதிக்கத் தகுதியில்லாதோரையும்
பிறர்மதிக்கும்நிலை உயர்த்தத்தகும்.
பொருளல்லாமல் சிறப்புடை
பொருள் வேறில்லை.

பொருளிலா வறியோரை
எள்ளிச்சிரிக்கும் எல்லோரும்.
பொருளுடைய தீயோரையும்
சிறப்புசெய்து போற்றுவர்.

பொய்யாவிளக்கெனும் பொருளானது
உடையோர் எண்ணியபடி.
எண்ணுமிடம் சென்று
பகையிருளை அறுக்கும்.

தீங்கின்றி பொருள்தேடும்
திறனால் அடைந்தபொருள்.
அறத்தையும் இன்பத்தையும்
ஒருவர்க்கு ஒருங்கேதரும்.

அருளன்பும் பொருந்தாவழியில்
வந்தடைந்த பொருட்பெருக்கம்.
பெருந்தீங்கினது என்றெண்ணி
விலகிவிடல் நலம்.

உடையார் இல்லாபொருளும்
சுங்கவரியால் பெற்றபொருளும்.
படைவென்று திறைகொண்டபொருளும்
வேந்தனுக்கு உரிமைப்பொருளாம்.

அன்பெனும் அன்னையீன்ற
அருளென்னும் குழந்தை.
பொருளென்று கூறப்பெறும்
செல்வச்செவிலியால் வளர்வதாம்.

தன்கைப்பொருள் கொண்டு
செயலாக்கம் தொடங்குதல்.
குன்றின் மீதேறிநின்று
யானைப்போர் கண்டதற்கொப்பாம்.

எக்கணமும் பொருளீட்டிடுதல்
செருக்குற்ற பகைஞரின்.
மூக்கறுத்து அழிக்கவல்ல
வாளைவிடக் கூர்மையானதே.

நல்வழியில் நற்பொருளை
மென்மேலும் ஈட்டுவோர்க்கு.
நல்லறமுமின்பமும் எளிதாய்
ஒருங்கே வந்துவாய்க்கும்.



பொருள் செயல்வகை

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# குமரி பள்ளியில் கொலு

நவராத்திரி வரும் முன்னே ஆரவாரம்
எம் பள்ளி ஆசிரியரும் மழலையரும்
படிகள் எல்லாம் சுத்தம் செய்து
இருக்கும் இடத்தில் அடுக்கி வைத்தாரே.

ஒவ்வொரு நாளும் வண்ண நிறங்களில்
கண்ணைக் கவரும் புதிய பொம்மைகள்
வடிவீஸ்வரம் தெருவில் வித விதமாக
வாங்கிய வருகையிலே கதை பேசிடுமே.

மரங்கள் விலங்குகள் பூச்செடிகள் கோயில்கள்
முளைப்பாரி மத்தியில் வண்ண விளக்குகள்
ஆண்டு தோறும் கொலுவில் விஞ்ஞானம்
மெய்ஞானமும் வியப்பூட்டும் வகையில் காட்சிகள்.



முன்னின்று மூத்தோர் ஆசீர்வாதத்துடன் நடத்திட
பார்த்தவர் கண்கள் மயங்கிடச் செய்யுமே
காலை மாலை வேளையில் பூஜை
அகமும் முகமும் மலர பிரசாதங்கள்.

ஒன்பது நாளும் பெண்களுக்கு முதலிடம்
ஒன்பது படிகளில் கலைகள் பெருமிதம்
பாலும் தேனுமாய் செல்வம் பெருகிடுமே
மும்மதங்களும் ஒன்றாய் கூடி மகிழுமே.

உற்றார் உறவுகளோடு அன்புக் கொண்டு
மந்திரங்கள் எல்லாம் முழங்கிடச் செய்து
இறைவனின் ஆசியை பெற்றுச் சென்று
மங்கலமாய் வந்துச் சென்றனரே பள்ளிக்கு.

மங்கலப் பொருளோடு குங்குமச் சிமிழும்
கொடுத்து வாழ்த்திட கடலையும் சுண்டலும்
குறையாதுக் கொடுத்து நிறைவாக உண்டு
மதிய உணவுடன் மகிழ்ந்துப் போனாரே.

வருடந்தோறும் கொலு என்றாலே எம்
பள்ளி நினைவுக்கு வருமே சீரோடும்
சிறப்போடும் எல்லா உள்ளங்களும் இணைந்து
வாழும் நாட்கள் அத்தனையும் பண்டிகையே.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# கரைகிறேன் உனது கண்ணசைவில்



இதழோரப் புன்னகையால்
இதயத்தைக் கவர்ந்தவளே

பார்வையில் வீழ்ந்தே
பாவையிடம் சரணடைந்தேனே

மனமும் மருகிட
காதலும் கனிவானதே

பனித்துளியாய்க் கரைகிறேன்
உனது கண்ணசைவில்

வசியம் செய்தே
என்னை ஈர்த்தாயே

வசமானேன் உன்னிடம்
மீண்டிட வழியில்லாதே

குறுநகைப் பூத்தே
நெஞ்சத்தில் நிறைந்தாயே

அதரங்களும் இனிக்குதே
அன்பான முத்தத்தாலே

நித்தமும் நினைவினிலே
பித்தமும் தெளியவில்லை

யுத்தமும் சிந்தையிலே
சித்தத்தில் கலந்ததே

மதிமுகமாய் மலர்ந்தவளே
என்னுள் ஒளியானவளே

இசையாய் வந்தவளே
இனிமையைத் தந்தவளே

புயலானது என்னுள்ளம்
தென்றலாய்த் தழுவிடு

மாற்றமது என்னிடம்
மயங்கினேன் உன்னிடம்

பாதத்தடம் பார்த்து
தொடர்கிறேன் நாளும்

வசந்தத்தின் வரவாகி
வாழ்வில் இணைந்திடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# அறிவியலின் தாக்கங்கள்

நிலவிலே காலடி
எடுத்து வைத்தான்
நிலமது அங்கே
கிடைக்குமா எனத்தேடியே.
வான் மகிழுந்து
படைத்தான் அவன்
வானிலேயேனும் போக்குவரது
தடை படாமலிருக்க.

பூமியில் இடமில்லை
எனத்தேற்றிக்கொண்டு
பூமி தாண்டி கடலடியில்
பட்டா போட்டான்.
காற்றிலே மிதப்பதை
கண்டுபிடித்த என் தோழன்
காட்டாற்றின் வேகத்தில்
மின்சாரம் கண்டான்.

எதிர்க்காற்று விசையிலும்
எரிபொருளிலும்
எத்தனை தேவைகளோ
என மின் கண்டான்.
எதிர் வினையொன்றைக்
கண்டான் மனிதன்
புவியீர்ப்பு விசைக்கு
எதிர் விசை கொண்டான்.

விண்கோளின் விலாசம்
அறிய மதி நுடபம்
விளாசி மானிடத்தை
குடியேற்ற முயன்றான்.
விண்வெளியில் தடம்
பதித்து-வழிகள்
வகுத்தான் நாளைய
செல்வங்களின் வாழ்விற்கே.



செயற்கை மழை
பெய்யச் செய்யவே
செந்நீர் சிந்தி சிரமமேற்றான்.

புதிய கண்டுபிடிப்புக்காக
. செவ்வாய் கிரகம் சென்று திரும்பிட
செயல்கள் மேற்கொண்டான்.
அம்மேதினியிலே.
சித்தம் தெளிய சிறந்த
மருந்தும் — செம்பவள
சிவப்பாய் மாற
இன்னொரு மருந்தும் என
சித்தனாய் வித்தைகள்
செய்தாய் அன்பு மானிடனே.

சிகரம் தொட்டாய்
அறிவியலின் நல்லாக்கங்களிலே.
எதையெல்லாமோ கண்டுபிடித்து
எதிரொலியின் ஆக்கங்கள்
எத்தனையோ உருவாக்கியவனே

கடலின் ஆழம்
எவ்வளவு தூரம் என்றே கணக்கிட்டவனே
இதோ உன்னோடு
வாழும் பெண்ணின் இதயத்தின்
ஆழத்தை என்று கண்டுபிடிக்க கருவிகள்
தருவிக்க போகிறாய்

கவிஞர் இராஜகை நிலவன், மும்பாய்

# வெந்து மடிந்த விழல்

கொற்றத்தில் கொடியோன் நிற்க!
கடுங்கண் முன்றில் குடிகள்!
நிரை இழந்த நீராணிக்கன்
நிறம் மாறிய நிலப்படுக்கை

விசும்பு உதிர்க்க மறந்த துளி
வையம் வெம்பி குமுறலிட
விரிசல் விழுந்த வண்டல்
வெந்து மடிந்த விழல்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# விமான நிலையத்தில்

பறந்து சென்று
பறந்து செல்பவர்களை
இறக்கிவிடுகிறேன்
ஆனால் ஒரு போதும்
என்னால் அவர்களைப் போல்
பறக்க முடிவதில்லை
அண்ணாந்து
பார்த்துக் கொண்டே
விமான நிலையத்தின்
அருகில்
ஆட்டோ ஓட்டுனராய் நான்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# நிரந்தரமாகத் தங்கி விடு



உன் உள்ளம் எங்கு
புன்னகைக்கிறதோ
இளகிக் களிக்கிறதோ

உன் உள்ளம் எங்கு
திருப்தியுறுகிறதோ
சுதந்திரம் உணர்கிறதோ

உன் உள்ளம் எங்கு
ஐயமின்றியிருக்கிறதோ
ஐக்கியமாகிக்கிடக்கிறதோ

உன் உள்ளம் எங்கு
அமைதி கொள்கிறதோ
பூரணத்தை அடைகிறதோ

அங்கேயே
நில்
தரி
நிரந்தரமாகத்
தங்கி விடு

கவிஞர் மரு. ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# நிரந்தரமாகத் தங்கி விடு

1
மதம்
இதம்
சிலருக்கு


2
இல்லை என்பதை விட
ஆம் அதற்கென்ன என்ற வார்த்தை
தீர்வை சீக்கிரம் இட்டுத்தரும்

3
பணத்தை சேமிக்க இரண்டு வழி
வருமானத்தை பெருக்குவது,
வருமானத்தை பெருக்குவது
( செலவை குறைப்பது :
ஆகாத காரியம் )

4.
எனக்கு பிடிக்கும் என்பதற்காக
ஸ்பைடர் மேன் வலையில்
என் தந்தையும்

5.
வட்ட கடிகாரம்
வாழ்க்கையை குறிக்கிறது

6.
இளநீர்
சீவுகிறான்
குலையாளி



7.
காலமுள் கத்தாது குத்தாது
சத்தமில்லாமல் நொடி நொடியாய்
உன்னை கொன்று கொண்டே இருக்கும்.

8.
எவ்வளவு குறைகள்
கொட்டினாலும் , அன்பெனும்
பெட்டி நிறையாது

9.
அறிந்து கொள்வோம்
செவுட்டு மெஷின் பிறர் சொல்வதை கேட்க
ஹெட்போன் பிறர் சொல்வதை கேட்காமல் இருக்க

10.
நீதிமன்றத்தில் நிறைய
உண்மை இருக்கிறது
சரி வர பராமரிக்க படவில்லை

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# அழகி

அவள் கண்களின் கண் (மை) பார்வையில்
காகிதப் பட்டமாய் பறந்தது என் மனம்.

தலை நிமிர்ந்து நடந்த நான் முதல் முறை தலை குனிந்தேன்
அவள் கால் கொலுசின் உரையாடலை கேட்க.

அவளின் கை வலையல்கள் அவளைப் பற்றி பாட
தென்றலும் உடன் சேர்ந்து கொண்டது பின்னணி இசையாய்.

அவளின் கருங்கூந்தல் காற்றில் ஆட மயிலோ
தன் தோகையை மறைத்துக் கொண்டு
ஒளிந்து நின்று பார்த்தது இது என்ன நடனம் என்று.

கம்பனா கண்ணதாசனா என ஒரு பெரும் யுத்தமே நடந்தது
அவளின் பாத சுவடுகளின் அழகை வர்ணிக்க.

சிறகடிக்கும் பட்டாம் பூச்சியாய்
அவளின் அழகிய பேச்சு
அந்த அழகில் ஒரு கணம்
நின்றது என் மூச்சு.

பட்டுப்புடவை கட்டிய பச்சிளம்
குழந்தை அவள்
வண்ணப் பூக்களை காலணிகளாக கொண்டவள் அவள்

அவளை அழகி என்று நான் வர்ணித்தால் நான் குருடன்
அவளை பேரழகி என்று வர்ணித்தால் நான் கவிஞன்.



கவிஞர் ர. ரமேஷ்

# தாரகையில் தன்னை அறிக

வானத்தாய்
இருளில் ஈன்றெடுத்த
முடிவிலிச் சிசுக்கள்.

சூரியன் மறைவிற்கு
ஏற்றி வைத்த
கண்ணீர்ப் பந்தங்கள்.

நிலா உலா வர
வானம் நட்டுவைத்த
அணையா விளக்குகள்

வானப்பரப்பில்
இருளில் வைக்கப்பட்ட
கோலப்பள்ளிகள்.

ஆகாய அரசன்
இரவுப் போரில்
பெற்றிட்ட விழுப்புண்கள்.

இரவுக்குழந்தை
விளையாடச் சுட்ட
வானப் பொத்தல்கள்.

சூரிய அடுப்பிலிருந்து
பொங்கிவழிந்த
சாம்பல் கங்குகள்.

வானவீதிமில்
வரையறாது மின்னிடும்
விலையில்லா வைரங்கள்.

பகலின் உக்கிரம்
வெடித்துச் சிதறும்
இரத்தத் துளிகள்.

வானக்கூடையில்
இரவில் மலரும்
வாசமில்லாப் பூக்கள்.

மதி இளவரசி
நடைபயில உடன் வரும்
உலாத் தோழிகள்.

வானக் கடவுள்
வீசியெறிந்த
செல்லாக் காசுகள்.

இருள் மூடிய சோகத்தில்
சூரியன் துப்பிய
எச்சில் துளிகள்.

வானமங்கை
வைத்து வைத்து எறிந்த
வெளிச்சப் பொட்டுகள்.




நிலா உறங்கவென
வானம் திறந்து வைத்த
ஒளிச் சாளரங்கள்.

சூரிய உழைப்பில்
வான மேனியில்
பூத்திட்ட வியர்வை.

நிலையாமை வாழ்வை
நமக்குப் பகரும்
நட்சத்திரம் கண்டு
நிம்மதி பெறுக.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# சூழ்ச்சி

த்ரேதாயுகத்தில் நைச்சியமாய்
கைகேயி கேட்ட வரத்தை நினைவூட்டி
நாடாளும் மன்னனை ஆரண்யத்துக்கு அனுப்பியது
கூனியின் சூழ்ச்சி!

பகடையை உருட்டி
சூழ்ச்சியால் பாண்டவரைப்
பழி தீர்த்தான் சகுனி!



துவாபரயுகத்தின் சூழ்ச்சியை
தர்மத்தின் பக்கமாய்
சூழ்ச்சியால் மாற்றினான்
பரந்தாமன்!

நித்தம் நித்தம் போராடும்
மனித வாழ்க்கையில்
புன்னகையைத் திரையாய்
முகத்தில் மாட்டி நயவஞ்சகமாய்
கூடவே இருந்து குழி பறிக்கும்
மனிதர்களை சூழ்ச்சியால் வெல்ல
ஒரு பரந்தாமன் போதாது!

இது கலிகாலம்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# திறப்பு

திக்குகெட்டு அலைபவருக்கே இறை கண் திறப்பு
திங்களன்று வாரத்தின் முதல் நாள் திறப்பு

திசையெங்கும் கட்சிகளின் கூடாரம் திறப்பு
திடமில்லா மானிடருக்கே மருந்தகங்கள் திறப்பு

தினமும் கதிரவன் ஒளியால் பூலோகமே கண் திறப்பு
தித்திக்கும் இனிப்பு கண்டால் அனைவருமே வாய் திறப்பு

திரையரங்கில் கூட்டம் வந்தாலே கதவு திறப்பு
திபுதிபுவென மழலைகளின் மாலை பள்ளி கதவு திறப்பு

திரையிட்ட மேடையில் பாடகர் வந்தபின் திறப்பு
திருப்புமுனையே முன்னேற வாசல் திறப்பு

திருட்டு கயவர்களுக்காக சிறைகள் திறப்பு
திருந்தி வாழ்பவர்களுக்கு மறுவாழ்வு மையங்கள் திறப்பு

திட்டி வசை பாடவே தீயவர்களின் வாய் திறப்பு
திடீரென அழும் சிசுக்கு தாயின் வாய் திறப்பு

திருமண விழாக்களுக்கே மண்டபம் திறப்பு
திருவிழாக் காலங்களில் புது கடைகள் திறப்பு

தில்லுமுல்லு செய்பவருக்கே காவல்நிலையம் திறப்பு
திரளான நீருக்காக மடை திறப்பு!



*கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்*

# அக்னிச் சிறகே மீண்டும் வா!

எங்கள் கலாமே! உமக்கு சலாமே!
வந்தாய் வலமாய் இந்தியாவின் நலமாய்
மீண்டும் வருவாய் புதிய உருவாய்
அறிவியல் ஆக்கவும் அறத்தைக் காக்கவும்
வேண்டும் மீண்டும் ஓர் கலாம்
எத்தனை மனிதர்களோ பூமியில் பிறக்கலாம்
அனைவராலும் கலாமாகச் சிறக்க முடியுமா?
மாணவர்களை இதயமாய் நேசித்தாய் நீயே
ஆனவர்கள் அவர்களென எப்போதும் பூசித்தாய்
புகழ்வானில்
பறந்தபோதும் கோடிகளில் நாட்டமில்லை
மண்வெளியில் எளிமையாய் வாழ்ந்தே மகிழ்ந்தாய்
விண்வெளி அறிவியலின் விடிவெள்ளியாய் திகழ்ந்தாய்
சுயநலம் துறந்து பொதுநலம் ஏற்றாய்
இலக்கை உருவாக்க யாருக்கும் நீ வலக்கை
உரியகாலத்தில் உயரிய செயல்கள் புரிவாய்
காலனிடம் சென்றாலும் காட்சியில் தெரிவாய்



*கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்*

# வார்த்தைகளின் பெறுமானம்

வார்த்தைகளுக்கும் பெறுமானமுண்டு
பயன்படுத்தும் விதத்தில் தான்
அதன் விலை நிர்ணயிக்கப்படுகிறது

வார்த்தைகள் நம்முடையது
எண்ணத்தில் உதிப்பதை உடனே
எடுத் தெறியா திருப்போமாக

சிலர் புரிந்து கொள்வார்கள்
சிலர் பிரிந்து செல்வார்கள்

சொல்லும் வார்த்தைகள்
கொல்லும் வார்த்தைகளாக
மாறிவிடாது இருக்கட்டும்

விழும் அடிகளை விட
உதிரும் வார்த்தைகள் தரும்
வலி மிக அதிகமல்லவா

அனுபவிக்காதவரை
அது யாருக்கும் புரிவதில்லை
விடியலில் தானே தெரிகிறது
சூரியனின் அருமை

உதிர்த்த பின் தானே புரிகிறது
வார்த்தைகளின் கொடூரம்
ஒரு பெண்ணிடம் பயன்படுத்தும் வார்த்தையில் உள்ளது
அழகிய ஆண்மை

அமைதியாகிப் போவதிலும்
பேசுவதிலும் உள்ளது அழகிய பெண்மை
ஏணியாய் நின்று ஏற்றியும் விடும்
"தொலைந்துபோ" என விரட்டியும் விடும்

"உள்ளே வா" என அழைப்பும் விடும்
"வெளியே போ"என் விரட்டியும் விடும்
தீயினால் சுட்ட புண் உள்ளாறும்
ஆறாதே நாவினால் சுட்ட வடு



கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா

# ஏற்பாயா

யாருமில்லா வாழ்வாய் கழிந்த எனக்குள்
ஒளியாய் வந்தவளே!
எத்தனையோ ஏமாற்றங்களையும் தோல்விகளையும்
சந்தித்த நான் உன்னிடமும் தோற்றுவிட்டேன்.



அத்தோல்வியையும் ஏற்கிறேன்
அன்பு செய்வதில்!
இப்போதே கேட்கின்றேன்
நீயே என் வாழ்வாய் என்னுடனிருப்பாயா!

உன் கருவில் என்னை சுமக்கவில்லைதான்
நீ ஆறுதல் சொல்லும்போதும்
காண்கிறேன் தாயின் நேசமதனை
தந்தையாகவும் உணர்கின்றேன்!

நீ என்னுடனே இருந்தால் என் தோல்விகள் ஜெயமாகும்
என் அவமானங்கள் துடைக்கபடும்
நான் உன்னை காதலிக்கிறேன்!

உன் தோளில் என்னை சுமக்கவில்லை என்றாலும்
நீ என் தந்தை தான்!
உன் கருவினில் நான் பிறக்கவில்லை என்றாலும்
நீ என் தாய் தான்!

உன்னுள் காண்கிறேன் என் மொத்த சுக துக்கங்களும்
என் உலகமும் நீயே என உணர்ந்திட்டேன்!

கவிஞர் ஜோஸ்குமரன், திண்டுக்கல்

# தனிமையில் இனிமையாய்

உறைந்து கிடந்த
நிமிடங்கள் எல்லாம்
உயிர்ப்பாய் நீ
என்னுள்ளே
வலம் வந்திட.

தனிமையின் பாதையில்
என்னுடனே
கரம் கோர்த்திட
முயலும் பேராவலும்.



நானே உன்
வாழ்வென
சொல்லாமல் சொல்லி
தனிமையை போக்கி
கலந்து ஒன்றியதையும்.

தனிமையில்
தனித்திடாது வேலியாய்
என்னுள்ளே தகித்து
உயிர்ப்பாய் நிழலாய்
நிழலாய் தாங்கிடும்
உன் காதல் என்றும்
என் இனிமையே!

கவிஞர் ஜெனி கிரேஷி, திண்டுக்கல்

# காலக்குழியில் து(இ)ன்பயூற்று

அமீரக மந்திரபூமியில்
ஆறு திங்கள் விடுமுறையில்
அனலாட்டம் போடும் ஆதவனையே
சரிக்கட்டிக் குருத்துவிடும்
மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்துச்
செல்லக்கன்று அப்பா

வாடிப்போகும் வாகைமுகை முகங்களை
கைபேசியில் காணும் பொழுதெல்லாம்
பாசத்தின் சவ்வூட்டுப் பரவல்
சரிந்து சரிந்து விழும் சி(த)ந்தை

அகிலத்தின் ஆணிவேர் அறம்
அறியாத அநாயகக் கூட்டம்
வீதியோரக் குப்பைத்தொட்டியில்
வீசியெறிய வேண்டிய
மட்காத சொல் செயல்களால்
வீங்கியிருக்கும் மலருள்ளம்

கல் தாங்கும் மலைக்கடன்
அவசர சிகிச்சைப் பிரிப்பில்
அடிக்கடி அனுமதிக்கப்படும்
சோறூட்டும் தொழில்

நீளும் எண்ணத்தின் தனிமையிரவு
கோடைவியர்வை ஆற்றில்
கலப்படமாகும் கண்ணீர் கண்ணீர்
தரையிறங்கி ஒற்றடமிடும் நிலா.



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# ஏதிலியாய் நாங்கள்

தந்தை அங்கி ருக்க
தாய் இங்கி ருக்கிறாள்.
ஈராறு திங்கள் வந்தது,
கத்தலுக்கும் புலம்பலுக்கும் வயது.
தந்தைக்கு வந்திட்டாள் அங்கு
அழகான மனைவி ஒருத்தி ;
என் தாய்க்கு நானிருக்க
இன்னொரு துணை தேடவில்லையே.

மொழியறியாப் புது நகரம்
இருந்தது கொஞ்சம் உயிரும் உடலும்
உடன் இலவசமாய் நான்.
எங்கெங்கு காணினும் நெருப்பு
அங்கங்கு கண்டால் கண்ணீர்
சோற்றுக்குச் சண்டை அங்கு
பிடிச்சோற்றுக்குச் சண்டை இங்கு.



கண்மூடிய தேசம் அங்கே
கண்திறந்த தேசம் இங்கே
உயிரிருக்கும் தேசம் அங்கே
உடலிருக்கும் தேசம் இங்கே
அடித்தால் வாங்கினோம் - நாங்கள்
உதைத்தால் பெற்றுக் கொண்டோம்.
என்ன செய்ய நாங்களும்
அரை சாண் வயிறு
எம்மைப் பாடாய் படுத்தியதே.

எங்கள் உடமைகள் விட்டு
அகதிகளாய் அலைந்து திரிந்து
நாதி யற்றவராய் நசுங்கி
இனம் இன்றிப் பிணமாக
எங்கெங்கும் அலை கின்றோம்
எதிலியாய் நாங்கள்

கவிஞர் சி. வே. முத்துச்செழியன், மதுரை

## நூல் அனுபவம்

## கவிதை நூல்

இது முதல் கவிதை. உண்மை அன்பே உன்னதமாய் மிளிரும். அதில் அரிதாரம் இருக்காது எனும் இயல்பினைக் கூறும் கவிதை இதுவாகும்.

"தனித்து நின்றதாக
நிலவென்றும் வருந்தியதுண்டா?
நாமும் இங்கே தனித்துவமாய்!"

எண்ணிலடங்கா கவிதைகளுக்குச் சுரங்கம் வெண்மதி! அக்கவிதைச் சுரங்கத்தில் இருந்து பெறும் யாவும் ஒவ்வொரு கோணத்தில் ஒளிருகின்றன. அவ்வண்ணமே இந்தக் கவிதையும் கவிஞரின் சிந்தனைக்குக் கிடைத்துள்ளது. இதுமட்டுமல்ல! இதே நிலவுக்குத் துணையாக, நம் கவிஞர் தன்னையே பூமியாக்கிக் காட்டும் காதல்மிகு வரிகள், இப்படித்தான்...

"துணைக்கோளாய் இருந்தும்
துணையற்று நிற்கும் நிலவே
உனக்கான பூமியாய் தொலைவில் நான்"

அடுத்து, காதலியின் / காதலனின் பலம் எதுவென உரைக்கும் கவிதை,

"என்னைக் கொன்று தின்னும்
கவலைக்குத் தெரியாது
நீ என்னுடைய பலம் என்பது!"

நினைவே ஒரு மனிதருக்கு அவர்தம் நெஞ்சத்துக் கலக்கத்தைத் துடைத்தெறியும் ஆற்றலாக உள்ளது. "நான் இருக்கிறேன் உனக்கு" எனும் நம்பிக்கை வார்த்தைகள் ஒருமுறை நமக்காக ஒருவர் உரைத்தாலே போதும். அந்த நம்பிக்கை வார்த்தைகளின் நினைவே நம்மை வாழ்க்கைப் பரப்பில் பல்விதத் துயர்களைத் தாண்டி முன்செல்ல வைக்கும். அதனைக் கவிதையாக்கிச் சொல்கிறார் இங்கே கவிஞர்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# நட்பு

நட்பொன்றே இறுதிவரை நல்லதுணை வாழ்வினிலே
வாழ்வினிலே வரும்துயரை விரட்டிவிட உடனிருக்கும்
உடனிருக்கும் தோழன்தான் உயிர்காப்பான் துன்பத்தில்
துன்பத்தில் துடுப்பெனவே கரைசேர உதவிடுவான்!

உதவிடுவான் உள்ளமதைத் தேற்றிடுவான் உயிர்நண்பன்
உயிர்நண்பன் அமைவதெல்லாம் ஆண்டவனின் வரமாகும்
வரமான தோழனுக்கு வருத்தமென அறிந்துவிடில்
அறிந்துவிட்ட அக்கணமே இவன்செல்வான் ஆறுதலாய்!



ஆறுதலாய் நட்பிருக்க ஆபத்தும் பறந்துவிடும்
பறந்துவிடும் துன்பத்தால் இன்பநிலை கூடிவரும்
கூடிவரும் சொந்தங்கள் உடன்வருமோ கடைசிவரை
கடைசிவரை நட்பேதான் துணையாகும் நிழல்போல!

நிழல்போலத் தொடர்ந்துவரும் வல்வினையும் தோற்றோடும்
தோற்றோடக் கடவுளிடம் நண்பனுக்காய் மன்றாடும்
மன்றாடும் நண்பன்தான் வாழ்வினிலே ஒளிவிளக்கு
ஒளிவிளக்கின் வெளிச்சத்தில் இருள்நீங்கும் இதயத்தில்!

இதயத்தில் அன்புடனே மகிழ்ச்சியுடன் பழகிடுவான்
பழகிடுவான் என்றாலும் தப்பென்றால் சுட்டிடுவான்
சுட்டிடுவான் குறைகண்டு தலைகுட்டி இடித்துரைப்பான்
இடித்துரைத்துப் பசும்பொன்னாய் மாற்றிவிடும் நட்பொன்றே.

கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# அவன் ஆணை

அழற்கண்ணன் சொன்னான்:
அணி! பெண் உடலை;
மண்ணுலகம் போ!
பணியிருக்கிறது!

அன்பான தாய் தந்தை!
கருத்தாக கல்.
பணியமர்.
மன்றல் ஏறு.
மாட்சிமை கொள்.
இருபுறம் குடும்பம் உயர்த்து.

சொந்தம் உண்டு;
பந்தம் இல்லை!
கடமை உண்டு;
உரிமை இல்லை.
பணி உண்டு;
பலன் உனக்கில்லை.
புண் வார்த்தை,
புன் சொல்லை,
புறம் தள்ளு.

பிள்ளைகளை பேண்.
பெற்றோரை சீராட்டு.
மகிழ்வுடன் செய்.
மனம் நிறைவுறுவாய்.



பெண்ணாய் பிறந்த
மேன்மை அடை.
மண்ணுலகத்தில்
விண்ணகம் கொணர்.

ஐயனே!
அகவை முதிர்ந்ததே!
பணி முடிந்ததா?

இன்னும் இல்லை அம்மையே!
கணவனை கண் போல் கவனி!
அவன் குறை நிறை சமன் செய்.
அவன் நிறைவுற
நான் உன்னை அழைக்க;
நேரம் வரும்.
அதுவரை என் நினைவில் நீ இரு.
என்றான்,அமரன்;
புன்முறுவல் பூத்து,

அமர்ந்திட்டேன்; அமைதியில்;
அரும் பொருளின் புன்னகை, புரிந்து.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நினைவுகள்

போவது நீதானே நினைவல்ல
என்று நான்.
நினைவோடு வாழ்வேன் நீண்டு.

நிம்மதி போனாலும் சன்னிதி
நீ என்று.
உன்கதி சேர மாட்டேன்.

வானுக்கும் மண்ணுக்கும் இடைவெளி
உண்டு தான்.
மழை வந்து இணைபதில்லையா.

நானுக்கும் நீனுக்கும் இருக்கின்ற
இடைவெளியை.
நினைவுகள் நிரப்பிப் போகட்டும்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு, இலங்கை

# பகல் கனவு

இருட்டில் வாங்கிய சுதந்திரம்
அனைவருக்கும் பொதுவானது
என்ற எண்ணங்கள் இன்று
பகல் கனவாய்

மதங்களின் மேலாடையில் கிழிசல்களாய்
சாதிகள் தேநீர் கடையிலும் தேவையில்லாத
குப்பைகளாய் சாதிகள்

ஒடுக்கப்பட்ட ஒரு சமூகம் இன்றும்
கறைகள் கழுவப்படாத தீண்டாமையின்
அசிங்கங்களாய்




நடக்கும் பாதையும் உறங்கும் சுடுகாடும்
இங்கே இன்னும் பலருக்கும் எட்டாத
பகல் கனவுகளாய்

இணையம் கண்டோம் சந்திரனை தழுவினோம்
ஆனாலும் சாதிகளின் வேர்களை அழிக்க
அறிவியலுக்கும் அறிவில்லை என் உணர்ந்தோம்

வண்ண கனவுகளாய் வந்த சுதந்திரம்
இன்றும் குடிசைப்பகுதிகளில்
தேடப்படும் குற்றவாளிகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# ரௌத்திரமும் அகிம்சையும்

சிந்தையில் கரு வந்து
வரி வடிவில் வர
தாமதிக்கும் இடைவெளியில்
காகிதத்தில்
பேனா முனை கொண்டு
மென்மையாய் குத்தி குத்தி
கவிஞன் பழகிய ரௌத்திரம்
அப்பொழுதே
வீணாகிப் போகிறது
காகிதம் அவனுக்கு அமைதியாய்
கற்பித்த அகிம்சையில்

கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# அது நானே!

பிறைக்காதலி
நெற்றித் திலகம் போலே
அவனியின் ஆகாசத்தை மறைத்து
பார்வை மொத்தமும்
பிறை அவனே நிறைய

வண்ண வண்ணமாய்
என்னருகே மினுக்கும் விண்மீன்களாய்
ஆதங்கத்தில் புன்னகைக்க
மௌனமாய் செவிக்கு ஏற்றாமலே
பொன் போன்ற நகைப்பில் மிளிர



திங்களுக்கு ஈடென
எனக்கேதுமில்லை என கர்வமாய்
கண்ணசைக்க நான்
பிறை காதலியானேனோ.

உள்ளத்தின் ஆழம் தொட்ட
என்னவன் சந்திரனை
நாணத்தால் மயக்க

நாளுக்கு நாள் மெருகேறும் அவனழகில்
மையல் கொண்டே மீளா மகடூ.

நானே
அது நானே!

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# காலம் ஆனாய் கண்ணதாசா

எம்பி எம்பி பார்த்தாலும்
எவனும் இல்லை உன்னைப்போல்
சிந்தும் தேனை செந்தமிழும்
சீராய் கொடுக்கும் நீயெழுத
முந்தி நிற்கும் உன்வரியில்
முடக்கம் உடைத்த தருணங்கள்
கண்ணில் நீரை துடைத்தபடி
கலக்கம் விடுவாய் என்றதுவே

காலம் வெல்லும் கவிவரிகள்
கண்ண தாசா நீதந்தாய்
கோலம் எதுவாய் இருந்தாலும்
கோலாய் நிற்கும் உன்பாடல்
ஞாலம் அறிந்த நல்லவனே
ஞானம் விதைத்த வித்தகனே
ஆலம் போலே தமிழுக்கும்
ஆய்ந்தே கிடைத்த புதையல்நீ



உந்தன் வரியே இதமாக்கும்
உள்ளம் அதனை செப்பனிடும்
இன்பம் துன்பம் எதுவாயின்
எதிரே வந்து(ம்) அரவணைக்கும்
கன்னல் மொழியை வடித்தவனே
கவித்தாய் பெற்ற பொன்மகனே
என்றும் நீயே தலைமகனே
எந்தன் தமிழின் தனியிடமே

யார்க்கும் புரியும் வகையினிலே
எளிதாய் தமிழைக் கோர்த்தவனே
நீர்த்துப் போக காவியத்தை
நின்றன் தூவல் வழங்கியதே
வார்த்தை தொடுக்கும் அழகினிலே
வடுக்கள் கூட மறைந்திடுமே
ஆர்ந்த சொத்தாய் தமிழுலகில்
ஆட்சி செய்யும் உன்நடையே

காலம் ஆனாய் கண்ணதாசா
காலா வதியாய் ஆகாமல்
பாலம் நீயே அமைத்திட்டாய்
பாட்டால் உலகை வென்றிட்டாய்
தோளாய் தாங்கும் உன்தமிழால்
சோர்வை விடுத்த உளம்கோடி
மீளா போதை உன்புலமை
மீண்டும் மீண்டும் வேண்டுகிறேன்

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# மழலையாகிறேன்

மீண்டும் ஒரு தரம் மழலையாகிட
வரமொன்று தந்தால் என்ன?
வையகத்தில் பூக்குவியலாய்
அள்ளி அணைக்கும் மழலை குவியலை தாண்டி
ஒன்றும் ஈடாகிடுமோ?

பிறந்து விட்ட முத்து பஞ்சு மெத்தையென
கையிலும் நெஞ்சிலும் தூங்குமளகில்
நாம் சொக்கிட தான் வேண்டுமே

மாதங்கள் கடந்திட முகம் பார்க்க தொடங்கிட
ஏதேதோ கதை கேட்டு தலையாட்டி சிரிக்க
புரியாதானாலும் சொக்குமழகில்
நெஞ்சுருகி போகுமே

நீ கேட்பது புரியாது எனக்கு
நான் கேட்பது உனக்கு விளங்காது
ஆனாலுமே நாம் மழலைகளாகி
சொக்கி போவேமே உனதழகிலே

ஏதோ கேட்பாய் தலையசைத்து
தலையசைப்பில் நாமும் கேட்க சிரிப்பாய் அந்த சிரிப்பில்
சொக்கிடுவோம் நாம்

கடின குரலுக்கு அதிர்ந்தழுவாய் வீரிட்டு
அழுகை நிறுத்தவே பாடாகி போகுமே

கடினமாய் கதைக்காது மென்மை தேடும்
மென்னகையே குழந்தை நீ
வெண்ணிலவு போல
என்றும் ஜொலிக்கும் பேரழகு நீ.

முள்ளில்லாத ரோஜாப்பூ நீ
கண்கள் இமைக்காது
இரசிக்க தூண்டும் பேரழகு நீ



கவிஞர் சுஹ்ரினாஸ் பேகம், இலங்கை

# பிரிதல்

சில நேரங்களில் பிரிதல்
நமக்கான தேடல்

சில நேரங்களில் பிரிதல்
நமக்கான சுயம்

சில நேரங்களில் பிரிதல்
நமக்கான தனித்துவம்

சில நேரங்களில் பிரிதல்
நமக்கானதோர் சுதந்திரம்

சில நேரங்களில் பிரிதல்
நமக்கான சிந்தை இடைவெளி



சில நேரங்களில் பிரிதல்
அன்பின் நிமிர்த்தம்

சில நேரங்களில் பிரிதல்
அதீத அன்பின் கூச்சல்

சில நேரங்களில் பிரிதல்
உயிர் வலியின் உச்சம்

சில நேரங்களில் பிரிதல்
தேடல்கள் நோக்கிய பயணம்

சில நேரங்களில் பிரிதல்
புரியாத நேசத்தின் விலகல்

சில நேரங்களில் பிரிதல்
அவமானங்களின் அழுத்தம்

சில நேரங்களில் பிரிதல்
உன்னோடு ஊடல் கொண்டாடும்
பொழுதுகளில் அழகியல்.

கவிஞர் சூரியகலா, மதுரை

# உடம்பொடு உயிரிடை



"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல சாதல்"
என்ற கவிதை வரிகளைப் படைத்து
எட்டாக் கனியாய் காதலர் ஆனால்
சாதல் சிறப்பென்று சாதித்த பாரதியை
சற்றே சாடிட வேண்டி அவ்வடிகளைத்
தேடிய போதறிந் தேனது குயில்பாட்டெனவே!

புறாக்கள் காதலில் வல்லவர்களென்றும்
புறாக்கள் இணையிலொன்று விறந்தாலும் மற்றொன்றும்
புவிவிட்டு போகுமென்பதை அறிந்த அடியேனுக்கு
பாரதிகாட்டிய குயிலின் காதலொரு அதிசயமென்பேன்;
பாட்டிலன்றே திருமணமின்றி இருமணம் இணைந்து
பாரினில் வாழும்வாழ்வதை சாடிய பாரதிதன்
படைப்பாம் குயில்பாட்டில் உடல்காதலை பாடினானா
இல்லை உயிரின் காதலைப் பாடினானாவென
இலக்கிய ஆர்வத்தால் அடியேனும் சிந்தித்தேனே!

குயில்பாட்டிலொரு உள்ளுரை உண்டென இயம்புவார்
கூறிடுவோர் கூறுமந்த உள்ளுரையால் உளம்மகிழ்ந்தேன்;
ஆத்மாவின் காதலையவன் அழகாய்ப் பாடினான்;
ஆத்மா பரமாத்மா என்ற புருஷனை அடைந்திடவேண்டும்;
ஆத்மா உடலென்றால் பரமாத்மா உயிரே ஆவார்;
அதனாலன்றோ நாவுக்கரசரும் நாயகன் நாயகிபாவத்தில்
ஆடலரசன் அம்பலவானன் திருவாரூரானை அடைந்திட
அன்னைதந்தை யைப்பிரிந்து சென்றபெண்ணாய்த் தன்னைவைத்து

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்"
என்றுபாட்டிசைத்து பரமனையடைய நல்வழி காட்டினாரதனால்
என்றமிந்த மனிதக் காதலைப் போற்றாது
ஏற்றம்தரும் இறைக்காதலைப் பாடுங்கள் கவிஞர்களே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# மலையே மழையே

வீசும் போது சத்தமிட்டு
விலகும் போது முத்தமிட்டு
கலைந்து கலந்தும் போகும்
கவிக்காற்றே

காற்றே ஏன் கதவை திறந்தாய்
கார்கூந்தல் கலைத்து போனாய்
விழாமலே வீசிப்போகிறாய்
பூமியைத் தட்டி புரளி கிளப்பினாய்

கிளப்பி கிலிகிலுத்து
கிஞ்சித்தும் பயமின்றி
அதிரடி ஆட்டத்தின் நாயகனே
ஆடிக்கு வருவாயோ



வருவாய் அம்மியை நகர்த்தி
வம்பிற்கு மரம் உலுக்கி
வருகின்ற தண்ணீருக்கு
வரவேற்பை வழங்கிடவே

வழங்கிடும் வள்ளலே
வானவில் தோரணத்தில்
ஏழுவண்ணம் பூட்டியெழுந்து
என்ன சொல்ல வருகிறாய்

வருவதும் போவதும்
வாழ்க்கையின் வண்ணமென்று
பூங்கதவின் தாழ்திறந்து
புதுவாசம் தூவுகிறாய்

தூவிப்போகும் மலைக்காற்றே
தூரத்து முகட்டினிலே
தூளிக்கட்டிபோடு
துள்ளிடும் இளமைக்கும்
துவண்ட முதுமைக்கும்
ஆசுவாசு பாலமாகி அமர்ந்திருக்கும்
தனிமை தீர்க்கும்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# கண்ணதாசனே!

காலக்கணிதமே! காலத்தை வென்ற கவியரசே!
வெள்ளித் திரையுலகை ஆட்சிசெய்த கவிஞனே!
கலைமகளின் அருளாலே விளைந்தன பாடல்பல!
துள்ளி விளையாடின பாடல்களில் சந்தங்கள்!
சொந்தமோ, சந்தமோ, நீதந்த  பாடல்கள்
எந்தக் காலத்திலும் இவ்வுலகில் நிலைத்திருக்கும்!
அடுக்கடுக்காய் சரணங்கள்! அவற்றுள் எதை
எடுப்பது, எவற்றை விடுப்பது ? கேட்டதும்
கொடுத்ததில்  கேட்டவர் திணறிடுவர்!  பாடலைக்
கேட்பவர்கள் பரவசத்தில் ஆழ்ந்திடுவர்! பாமரர்க்கும்
சட்டென மனத்தில் பதிந்தன நின்பாடல்கள்!
சங்க இலக்கியத்தின் சாறெடுத்துத் தேன்கலந்து
எங்களுக்குச் சுவையான தமிழ்விருந்தைத் தந்தவனே!
இதிகாச, புராண, வேதங்களின் கருத்துகளை
போதிப்பதாய் அமைந்தன தத்துவப் பாடல்கள்!
வள்ளுவன், கம்பன், இளங்கோ, பாரதி,
சொல்லிய கருத்துகளை சூழலுக் கேற்றபடி
எளிய வார்த்தைகளில் அள்ளி வழங்கிட்டாய்!
மதங்கள் பலவும் போதிக்கும் நற்கருத்தை
காதலை, உறவை, பிரிவை, இயற்கையை,
ஊடலை, வேதனை மிகுந்த உள்ளத்தின்
வெளிப்பாட்டை உன்போல் உரைத்திட யாருமில்லை
இந்நாளில்! சோதனைகளைத் தாங்கி சாதித்தாய்!
அனுபவங்களைப் பாடினாய்! இதயங்களை வென்றாய்!
மனவாசம், வனவாசம், ஆட்டனத்தி ஆதிமந்தி
அர்த்தமுள்ள இந்துமதம், இயேசு காவியம்,
புதினங்கள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள்
திரைக்கதை வசனங்கள், நான்காயிரம் கவிதைகள்
உரைத்திடுதே  உந்தன் பன்முகத் திறன்களையே!
போற்றவும், நிலைமாறின்  தூற்றவும் உன்னைப்போல்
ஒருவருக்கும் துணிவில்லை! எல்லோர் இதயத்திலும்
உறைகின்ற கண்ணதாசா!  மறைந்தும் தமிழுலகில்
இறவாப் புகழுடன்  எந்நாளும் வாழ்ந்திடுவாய்!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரீ

# குல சாமி

நம் தலை முறையின் முன்னோர்கள்
மறைந்தவர்கள் நினைவாக.

கோவில் கட்டி வழிபடும் *நடுகல்* என
சாமியாய் பாரம்பரிய வழிபாடு.

வழி வழியாய் கடைபிடிக்கும் நம் முன்னோரை போற்றிடும்
உயர்வான ஓர் செயல் *குலசாமி* வழிபாடு.

மக்களைக் காக்கும் உயிர் போராட்டம் போர்களில்
வீரமரணம் என *புகழுடல்* எய்தியவர்கள் நினைவாக
கோவில் கட்டி வழிபடும் தொன்று தொட்ட கலாச்சாரம்.

சொந்த பந்தம் உறவுகளென ஒன்று கூடி வழிபடும்
சிறு தெய்வ வழிபாடு குல சாமி பெயராலே
*ஒற்றுமையின் வழிபாடு*.

பாட்டன் பூட்டன் காலம் முதல் முன்னோரின் வழிபாடு
தலைமுறை தாண்டியும் வழிபடும் வழக்கமே
தொடர்ந்திடும் நம் உறவுகள்.

கடவுள் நம்பிக்கை அவரவர் சுதந்திரம்
முன்னோர்கள் வழிபாடு மனதின் ஒரு நிலைப்பாடு
ஆனாலும்
குல சாமி நம் வாழ்க்கையில் முதல் சாமி.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# அறம் பொருள் இன்பம்

பொருளை மணம் செய்தாள் அறம்!
இன்பம் வந்து பிறந்தான்!
பொருளை அடைவதென்ன எளிதா?
ஆமாம்! ஆனால் உழைப்பின்றி பொருள் இல்லை!

சோம்பிக் கிடந்தால் கிட்டுவதில்லை!
ஊழையும் உப்பக்கம் காணலாம்!
ஓயாது உழைத்துக் கிடந்தால் வெல்லலாம்!
அன்பீனும்! இன்பமுமீனும்! தீதின்றி வந்த பொருள்!

பொருளைக் காக்க கல்வி!
கல்வி கற்க தேவை முயற்சி!
முயற்சி உடையோர்! இகழ்ச்சி அடையார்!
உடைத்தம் வலியறிதல் முதல் படி!




ஒன்றில்லையேல் ஒன்றில்லை!
கல்வி வர பதவி வரும்!
பதவி வர பொறுப்பு வரும்!
பொறுப்பு வர பயம் வரும்!

பயம் அறத்தின் வழி செலுத்தும்!
அறம் வாய்மையின் வழி நிற்கும்!
அறத்திற்கு அன்பு துணை என்பர்!
அறியார்! மறத்திற்கும் அஃதே துணை!

வீரம் விளைய விவேகம் துணை நிற்கும்!
இரண்டின் வழி நின்றால் அறம் கோலோச்சும்!
அறத்தின் ஆட்சியில் பொருளுக்கு குறைவேது?
இரண்டும் இணைந்தால் இன்பமன்றி இடர் ஏது?

புரிந்து கொண்டால் பிணக்கேது?
பொது வாழ்வில் கறையேது?
இன்ப வாழ்வில் குறையேது?
இலக்கு நன்றானால் தவறேது?

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# கவிதைத் துளிகள்

எது எதற்குள்ளோ
ஒளிந்து கொள்ளும்
நேரங்களை
கண்டுபிடிக்கத்தான்
நேரமில்லை

நல்ல வேலை
இது கனவு
என்ற காலையை விட
சிறந்த பொழுது
எதுவாக
இருக்க முடியும்



வார்த்தைகளின்
தூய்மையை
உண்மையாகவே
சலவை செய்வது
செயல்களின் நேர்மை

யானையின்
கால் தடம்
பள்ளமாக
கடக்கிறது
எறும்பு.

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# கனவு

நிறைவான வாழ்வினை
நிதமும் கண்டாள்
ஏழைச்சிறுமி கனவில்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

## நாச்சியார் 7வது திருமொழி கற்பூரம் நாறுமோ? பாசுரம்10

கோதையாம் ஆண்டாள்தான் பாஞ்சஜன்யம் தன்னிடத்தே
அதனனுபவம் கேட்கின்றாள்! பிரியாமல் அந்தரங்கம்
தன்னிலுமே உடனுள்ளாய்! எம்பெருமான் விரும்புங்கால்
இதழணைத்து அதரபான நீராட்டம் சுவையினிமை
காண்கின்றாய்! எம்பெருமான் திருமேனி கரியநிறம்
நீள்கரத்து சங்கதுவோ வெண்மையே! சங்கினிடம்
பேசுவதும் கேட்டறிவதும் எம்பெருமான் நற்றொடர்பே!
ஆறாவது பாசுரத்தே சங்கதனின் பாக்கியமோ
நம்மனோர்க்கு கிட்டாதே! கைத்தலத்து வாசமது
நிரந்தரமே! இதழமுத நீராட்டம் அதரபானம்
சுவைத்திடுதல் பாக்கியத்தோன்! எம்மனையோர் பெற்றிலமே!
ஏழாவது பாசுரத்தே எம்பெருமான் கைசயனம்!
பேரழகு மிக்கவனே! கைங்கர்யச் செல்வமது
மிகச்சிறப்பே ஈதெல்லாம் பெற்றிலமே சாற்றுகிறாள்!
எட்டாவது பாசுரத்தே எம்பெருமான் பெருங்காதல்
பெண்டிரெலாம் சங்கிடத்து சீற்றமதே! உண்பதுவோ
உலகளந்தான் வாயமுதம்! கைப்பிணைப்பு நீங்காமை!
கிட்டாத பெண்டிரெலாம் பூசலிட சங்கதுவோ
ஏகாந்த சுகானுபவம் முழுதுற்று மகிழ்கிறதே!
ஏங்குவார்க்கு கிட்டாத பரிதாபம்! ஏமாற்றம்!
ஒன்பதாவது பாசுரத்தே அச்சீற்றம் தொடர்ந்திடுமே!
பதினாறு ஆயிரவர் தேவிமார்கள் எதிர்பார்த்து
காத்திருப்ப சங்கதுவே கொள்கிறதே! மாதவன்தன்
இதழூரும் தேனதுதான் கிட்டாதே கவல்கின்றாள்!
பத்தாவது பாசுரத்தே பத்தினையும் சுவைத்து
சுவைத்தவர்கள் பத்மநாபர் அணுக்கராகி நீள்சுற்றம்
ஆவார்கள்! கோதையே போலவர்கள் எம்பெருமான்
நெருங்கியதோர் உறவினரே ஆவார்கள்! ஏழாவது
முற்றிற்று! எட்டாவது மேகத்தின் தூதாகும்!
அப்பத்தும் தரவுகொச்சக கலிப்பாவே! கண்ணனையே
அடைதற்காம் தவிப்புணர்த்தும்! ஆண்டாள்தன் அடிசரணே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# தேடி வந்த தேவதை

## பா வகை: பாவகை: அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு:

எந்நாளும் இவள்தானே என்னையாளும் இளவரசி
இந்நாளாய் வணங்குகிறேன் என்மார்பின் உயிர்மூச்சாய்
விர்நீரும் பொய்த்தாலும் விதிமதியின் குலவிளக்கு
சொந்தமென வந்தவளாம் சுகந்தமலர் பாவையவள்
பந்தமெனும் உறவிற்கு பைம்பொழிலின் காட்சியவள்
சிந்தையாளும் என்னழகே செந்தாமரை பூந்தளிரே.

தாழிசை: 1

தேடிவந்த தேவதையாம் தேன்நிலவின் மழலையவள்
கோடிநன்மை கிடைத்திடவே கோடிமலர் பிறப்பெடுத்தாள்
பாடியிங்கு மயக்கிடுவாள் பாசமிகு மொழிதனிளே.

தாழிசை: 2

இப்பிறப்பின் என்னுயிராய் இதயமெங்கும் குடியிருப்பாள்
எப்பிறப்பும் நினைத்ததில்லை இவள்பிறந்த நாள்முதலாய்
முப்பொழுதும் இவள்நினைவு முழுமதியாய் நெஞ்சினிலே.

தாழிசை: 3

மழலைமொழி பேசவந்த மண்ணழகின் பொன்னழகி
குழந்தையாக அவதரித்த குலமகளின் அன்பழகி
அழகுகவி பாடவந்த அன்னையெனும் தமிழ்மகளே.

பேரெண்:

என்னுள் வாழும் என்றன் பாவை
தன்னை வாழ்த்தும் தாய்மையின் உறவே.
துன்பமும் துடைத்திடும் துணிவெனும் இதழே
இன்பம் நல்கிடும் இனிமையின் கனியே.

அளவெண்:

தவமென கிடைத்த தங்க செல்வியே
நவமணி விரும்பா நங்கையின் புதல்வியே
கவலையை மறந்தேன் கைகளில் தவிழவே
இவளின் காவியம் எழிலின் ஊற்றே.



இடையெண்:

சொந்தம் கொண்ட பூ
சொர்க்கம் தேடும் பூ
சிந்தை வெல்லும் பூ
விந்தை அல்லும் பூ
நெஞ்சில் வாழும் பூ
வஞ்சகம் நினைக்கா பூ
மிஞ்சும் அன்பின் பூ
கொஞ்சும் பாசப் பூ

சிற்றெண்:

இதயமும் மகள்; இன்பமும் மகள்;
வாழ்வும் மகள்; வானமும் மகள்;
விண்ணும் மகள்; விண்மீன் மகள்;
அன்பும் மகள்; அகிலமும் மகள்;
அறிவும் மகள்; அழகும் மகள்;
எழிலும் மகள்; எழுத்தும் மகள்;
உண்மையும் மகள்; உறவும் மகள்;
கண்ணும் மகள்; கருணையும் மகள்;

தனிச்சொல்:
என்னிதயம்

சுரிதகம்:

தேடி வந்த தென்றல் காற்றாய்
வாடிப் போகும் வற்றா நெஞ்சம்
பாடிப் பேசிடும் பதுமை உள்ளம்
ஆடியே மகிழும் அன்பின் இல்லம்
கூடி வாழ்ந்திடும் குழந்தை வீட்டில்
கோடி நன்மையோ குமரியின் வடிவிலே.

கவிஞர் ஏ. தவணிதன், பல்லடம்

# மழை துளியின் மடல்!



கடிகார முட்களுக்கு
வாழ்க்கைப்பட்ட இயந்திரங்களே
என்றாவது கேட்டது உண்டா ?
எங்களின் வார்த்தைகளை
ஓட்டுவீடுகளில் ஒலித்திடும்
எங்களின் ஷேக்ஸ்பியரின்
காவியங்களையும்
கூரைவீட்டுகளில் நாங்கள் இசைக்கும்
தெம்மாங்கு பாடல்களையும்
நின்று கவனிக்க நேரம் ஏது
உங்களுக்கு!
எம்மைக்கண்டதும்
காவலரை கண்ட கள்வராய்
பதுங்கி ஓடும் உங்களுக்கு
கால்வாய்களில் நாங்கள் நடத்தும்
கலை நிகழ்ச்சி புரிவது கடினமே
சமையலறையில் கொதிக்கும்
சாம்பார் வாசத்தைக் கூட
நுகராத உங்களின் நாசிகளுக்கு
நாங்கள் ஈன்றெடுக்கும்
மண்வாசம் எட்டுவது சற்று சிரமமே!
மெல்லிசை தான் புரியவில்லை என
மேற்கத்திய இசைக்கு மாறினால்
போட்டுவிடுகிறீர்கள் தலையங்கத்தில்
வெள்ளப்பெருக்கம் என
என்ன செய்வது
காதலியை காண தவமிருக்கும்
காதலன் போல
எங்களுக்காக தவமிருப்பதும்
எங்களைக்கண்டதும்
சீர்வரிசைபோதாத மாமியாராக
புலம்புவதுமே வாடிக்கையானது
உங்களுக்கு
உதிரத்தை உணவாக்கியவளுக்கே
இல்லத்தில் இல்லாத இடம்
எங்களுக்கு கிடைப்பது ஐயமே
விண்ணுக்கும் மண்ணுக்கும்
இடையே நாங்கள் நடத்தும்
உரையாடல் ஒன்று தான்
ஈரம் வேண்டும் ஐயா
உலகமோ உறவோ
சுழன்றிட ஈரம் வேண்டும்!

கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# தோற்றுப் போகும் வார்த்தைகள்

மூழ்கிப் போன
காகிதக் கப்பலுக்கு
முக்கிமுக்கி அழுது
அது போல் வேண்டாம்.
அதே தான் வேண்டும்.
உருண்டு புரண்டு
அடம்பிடித்து
அடிவாங்கி தூங்கிப்போய்.
நேற்று நடந்தது அத்தனையும் மறந்து
அன்றலர்ந்த மலர் போல்
அன்றைய அமர்க்களத்திற்கு
ஆதாரத்தைத் தேடும்
மழலை வாழ்க்கை
இனி வருமா?



வாழ்க்கைப் பயணத்தில்
சுமந்து சென்ற கப்பல்
கவிழ்த்து விட்ட நிலையில்
துடுப்பாவது பிடித்துக்கொண்டு
ஏதாவது ஒரு கரையில்
கரைசேரும் போது,
அடுத்து என்ன?
பதட்டத்தில் துடிப்பு தேடும் மனம்?
நிதானத்தில் செயலற்றுப் போகிறதே?

என்றோ ஒருநாள் வருகின்ற
கப்பலுக்காக காத்திருப்பு!
அடிப்படை ஆகாரங்களை சேமித்தல்.

இனி என்ன செய்யப்போகிறோம்?
இக்கணமே கடலில் வீழ்ந்து
விட்டுவிடு உயிரை!

அவசரத்தில் வாழ நினைத்த மனம்
நிதானத்தில் வீழ நினைக்கிறதே?

கவிஞர் நுதல்விழி, இராணிப்பேட்டை மாவட்டம்

# அந்தி மழை

சிந்திடும் வான்மழை
சிலிர்த்திடும் தேகம்
அந்தியில் பொழிவை
அளித்திடும் மேகம்
வெம்மையின் தாக்கம்
விலக்கிடும் பாரு
அம்மையின் அன்பாய்
அணைத்திடும் நீரு
செடிகள் எல்லாம்
துளிர்த்து மகிழும்
கொடிகள் எல்லாம்
படர்ந்து நெகிழும்
மரங்களின் கிளைகள்
மழையில் குளிக்கும்
வரமாய் கனிகளை
தாராளமாய் அளிக்கும்
புள்ளினங்கள் சிறகை
விரித்து உதறும்
வெள்ளித் துளியாய்
எங்கும் சிதறும்
சாலைகளில் பெருக்கெடுத்து
வெள்ளம் ஓடும்
சோலைகளை கண்டு
செழிப்பாக்க நாடும்
புவிமகளும் தன்னுள்
குளுமையாக மகிழ்வாள்
கவிஞனும் கவியாத்து
மழையை புகழ்வான்



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# கவியரசர் கண்ணதாசன்

அக்கால கவிஞர்களும் சரி
இக்கால கவிஞர்களும் சரி
ஆற்றல் மிக்க கவிஞர்களே!
இருபதாம் நூற்றாண்டு கவிஞர்களில்
இயற்பெயர் முத்தையா முக்கியமானவர் ஆவார்.

எட்டாம் வகுப்பு மட்டுமே படித்தவர்
பல திறமைகளை வளர்த்துக் கொண்டவர்.
நாத்திகனாக இருந்தவர்,
சமய சந்தர்ப்பத்தினால் ஆன்மீகவாதி ஆனார்.
முதன் முதலில் அம்பிகை மீது பாடல்கள் எழுதினார்.
இவர் பாடாத பாடல் இல்லை.
பேசாத பொருள் இல்லை.
மக்கள் நலன் பேணியவர்.
மிகவும் ரசிக்கும் தன்மை உடையவர்.
மனதில் தெளிந்த ரசனை உள்ளவர்



அரசியலில் பல்வேறு கட்சிகளில் இருந்தவர்.
5000 பாடல்களை புனைந்திருக்கிறார்.
சோகப் பாடல்கள் , தத்துவ பாடல்கள், பக்தி பாடல்கள்,
காதல் பாடல்கள் சொல்லிக் கொண்டே போகலாம்.

அர்த்தமுள்ள இந்து மதம் ஆன்மீகமான நூல்.
சேரமான் காதலி நூலுக்கு சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டது.
தான் செய்த தவறை ஒப்புக் கொள்ளும் குணம் உடையவர்

இவர் மறைந்தாலும் இவருடைய பாடல்கள்
காலத்தால் அழியாத மிக சிறப்பு வாய்ந்தது

கவிஞர் அ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# உடைந்த உள்ளம்

தேடி திரிந்தும் உன் முகத்தை
காணமுடியாமல் தவித்த இதயம்

வாடிய பூவென வீச நினைத்த
நம் நினைவுகளை

உன் புகைப்படத்தை
என் கண்களில் படவைத்து

மீண்டும் பூக்க செய்து
வேடிக்கை பார்க்கும் கடவுளுக்கு

என் உடைந்த உள்ளம்
என்ன விளையாட்டு பொருளோ?



கவிஞர் மா. பாலகுமாரன்



அகர முதல

# ஏவுகணை நாயகனை ஏத்து!

01.
இந்திய விண்வெளி ஏற்றமும் பெற்றிட
சிந்திடும் செய்கையோ சிந்தையில் - முந்தியே
மேவுபுகழ் பெற்றதோர் மேன்மைக் கலாமிவர்
ஏவுகணை நாயகனை ஏத்து.

02.
செயற்கைக்கோள் தன்னை செலுத்தும் பணியில்
முயற்சிகள் ஆயிரம் முத்தாய் - வியக்கவே
கோவெனும் ஆளுமை கொண்டதோர் கோமகன்
ஏவுகணை நாயகனை ஏத்து.



03.
வானூர்தி கண்டு வகையாய்ப் பறக்கவே
தானூர்ந்து சென்ற தகவனில் - தேனூராம்
தூவும் புகழினில் தொல் தமிழ் மாண்பராம்
ஏவுகணை நாயகனை ஏத்து.

04.
குடியரசின் மேன்மையைக் குன்றாது காக்க
நடிப்பறியா மாந்தர் நவிலும் - படிப்பினை
நாவும் வணங்கிட நாற்றிசை வாழ்த்திடும்
ஏவுகணை நாயகனை ஏத்து.

05.
தமிழரின் வாழ்வில் தனிப்புகழ் சேர்த்தே
இமைபோல் தமிழில் இசையாய் - அமைந்தவர்
பூவும் மகிழ்ந்திடும் புன்சிரிப்பை நல்குமோர்
ஏவுகணை நாயகனை ஏத்து..


06.
பிரியா விடைபெற்று பேய்க்கரும்பில் சாய்ந்த
பெரிய வினைத்திறனின் பேறால் - அரிதினில்
கூவும் குயிலிடை கொண்ட துறக்கமாம்
ஏவுகணை நாயகனை ஏத்து.

கவிஞர் தமிழன்பன், சேயாறு

# முகவரி தேடும் காற்று

**நூல் அனுபவம்** **புதினம்**

"கவிமாமணி" இரஜகை நிலவன்




ஒரு நிமிடம் நின்று தந்தையை பார்த்த தமிழரசு,"இந்த யுத்தம் ஆரம்பித்து ஒரு வருடமாகிவிட்டது அப்பா. நான் கல்லூரி முடித்தவுடன் உங்களிடம் கேட்டேன். அன்று நீங்கள் தனித்துச் செயல் பட அனுமதித்திருந்தால் நான் இன்று ஒரு அஸ்திவாரமாவது அமைத்திருப்பேன். இப்படியே நீங்கள் உங்கள் பிஸினஸ் சாம்ராஜ்யத்திற்குள் இழுத்துப் போட்டுவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள்."

"ஒன்று உங்களுக்குத் தெரியுமா? நான் எங்கே போனாலும் ஜே.கே. அங்கீகாரம் என்னைத் துரத்துகிறது. ஜே.கே.சாரின் மகன் என்பதால் பல சலுகைகள் எதிர் பார்க்காமலே மடியில் வந்து விழுகிறது. எனக்காக என்று விருத்தியடையச் செய்த உங்கள் வியாபார சாம்ராஜ்யத்தை நீங்களே கட்டிக் கொண்டு கொண்டாடுங்கள். நான் தமிழரசாக அடையாளப்பட வேண்டும்.அதற்கு எனக்குள்ள அத்தனையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்." என்றான் அரசு. "தனியாகப் போனால் செத்துப் போவாய் அரசு. அப்பாவிடம் சவால் விட்டு வந்தோமே.. இனி எந்த முகத்தோடு போவோம் என்று வருந்தியே காணமல் போய்விடுவாய்.

நிமிடம் நின்று தந்தையை பார்த்த தமிழரசு,"இந்த யுத்தம் ஆரம்பித்து ஒரு வருடமாகிவிட்டது அப்பா. நான் கல்லூரி முடித்தவுடன் உங்களிடம் கேட்டேன். அன்று நீங்கள் தனித்துச் செயல் பட அனுமதித்திருந்தால் நான் இன்று ஒரு அஸ்திவாரமாவது அமைத்திருப்பேன். இப்படியே நீங்கள் உங்கள் பிஸினஸ் சாம்ராஜ்யத்திற்குள் இழுத்துப் போட்டுவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள்." "ஒன்று உங்களுக்குத் தெரியுமா? நான் எங்கே போனாலும் ஜே.கே. அங்கீகாரம் என்னைத் துரத்துகிறது.

## நூல் அனுபவம் புதினம்

ஜே.கே.சாரின் மகன் என்பதால் பல சலுகைகள் எதிர் பார்க்காமலே மடியில் வந்து விழுகிறது. எனக்காக என்று விருத்தியடையச் செய்த உங்கள் வியாபார சாம்ராஜ்யத்தை நீங்களே கட்டிக் கொண்டு கொண்டாடுங்கள். நான் தமிழரசாக அடையாளப்பட வேண்டும்.அதற்கு எனக்குள்ள அத்தனையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்." என்றான் அரசு. "தனியாகப் போனால் செத்துப் போவாய் அரசு. அப்பாவிடம் சவால் விட்டு வந்தோமே.. இனி எந்த முகத்தோடு போவோம் என்று வருந்தியே காணமல் போய்விடுவாய். உனக்காக நான் வளர்த்து வைத்திருக்கின்ற சாம்ராஜ்யத்தை விரிவாக்கு. ஜெயக்குமாரின் பெயரைத் தகர்த்தெரிந்து விட்டு புதிய சாதனைகளை செய்து காட்டு. எந்த நாடுகளிலெல்லாம் இன்றும் உன் தந்தையால் காலடி வைக்க முடிய வில்லையோ அங்கே போய் கொடி நாட்டு. அதை விட்டு விட்டு ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறாய் என்றுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது." சிரித்துக் கொண்டே சொன்னார் ஜே.கே. என்று போராட்டம் ஆரம்பிக்கிறது....

இது தந்தைக்கும் மகனுக்கும் நடக்கும் ஒரு மிகப்பெரிய சவால் விடும் விழா. மகன் தன் காலில் நிற்பேன் என்று சவால் விட்டு வீட்டை விட்டு வெளியேறி வெற்றி பெற்றானா? என்ற கேள்வியில் எழுந்த புதினம். இதில்

விமரிசனம் தர வேண்டியது
வாசகராகிய
நீங்கள்





திரு கவி வசந்த நிலா

## நூல் அனுபவம்

## கவிதை நூல்

**கவிஞர் இராஜஸ்ரீ மகேஷ் ; வெளியீடு: இராஜஸ்ரீ பதிப்பகம்**
**பக்கங்கள்: 110 ; விலை: ரூபாய் 130/-**

அறிவுக்கு விருந்தாகும்; மனதிற்குச் சுகமாகும்; அன்பிற்கு அடிகோலும்; இன்னும் பலவாகும்; இவை அருந்தமிழின் குணமாகும். அவ்வாறான வகையில், கவிஞர் இராஜஸ்ரீ மகேஷ் அவர்களின் அருந்தமிழ்க் கவிதை நூலான "முகிழ்நகை", காதலின் குணங்களைக் கண்முன் நிறுத்துகிறது. அழகியல் கொண்ட கற்பனையுடன் காதலில் வயப்படும் மனிதர்களின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளது இந்நூல்.




200 கவிதைகளில் காதலால், கவித்துவத்தால், நேசத்தின் வெளிப்பாட்டினை, காதலெனும் கேணியிலிருந்து வாரி இறைத்துள்ளார் கவிஞர். வற்றாத அக்கேணியில் இருந்து, வையகத்திற்குத் தேவையான நேசமும் கொஞ்சமும் குறைவிலாது ஊற்றெடுத்த வண்ணம் இருப்பதற்குக் கவிஞர்களும் ஒரு காரணமே!

அவ்வகையில், கவிஞர் இராஜஸ்ரீ மகேஷ் அவர்களின் படைப்பில் உள்ள சில குறுங்கவிதைகளைக் காண்போம்.

"உயிரின் ஆழம் வரை
அரிதாரம் பூசாமல்
உனதன்பே அழகாய்ப் பூக்கிறது!"

*கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி*

ஆனால், அவ்வாறு நம்பிக்கையே கிடைக்காது போனால், அந்த அன்பே ஆயுதமாகும் எனவும் எழுதியுள்ளார்.

"நிர்கதியாக நிற்கவைப்பதில்
அன்பும் ஒருவகை ஆயுதமே
அனாதையாய் விட்டு செல்கையில்!"
இதனை எவரும் உணராது இருப்பரோ இப்பூவுலக வாழ்வில்?

அழகியலுடன் விளங்கும் கவிதை ஒன்றிங்கே,

"பிடித்தமான பழங்கால கதைகளில்
திறவுகோல் தொலைத்த பெட்டிக்குள்
ஓர் அழகான ரகசியம் நீ!"

என்று உள்ளது. இதனைப் படிக்கையிலே, சிறார் பருவத்தில் மூத்தோரிடம் நாம் கேட்ட கதைகளெலாம் நினைவில் நிழலாடும். இரவின் மடியில் பௌர்ணமி நிலவில் பாட்டியின் கைகளால் ஆளுக்கொரு உருண்டையாக உணவை உருட்டிக் கொடுத்ததை அனுபவித்து உண்டபின், கண்ணிமைகள் நித்திரைக்கு இடம் கொடுக்கும் வேளையில் இந்தப் பழங்காலக் கதைகளில் இலயித்து கனவிலும் அதன் தொடர்ச்சியைக் காணும் காலம் அதுவாகும். அத்துடனாக இணைந்தது இந்தக் காதல் கவிதை. நினைத்தாலே இனிக்குமே!

இதுபோன்ற இன்னும் பல்வித சுவாரசியங்களையும் நம் கவிஞரின் கவிதையில் காணலாம்.


பெண்களுக்குச் சமையல் மட்டுமல்ல; சமூகமும் வேண்டும் என்பதனைத் தன் காதல் கவிதைகளிலும் காட்டியுள்ளார் கவிஞர் இராஜஸ்ரீ மகேஷ். இக்கவிதைப் படைப்பு முழுதும் "அன்பு" என்ற ஒற்றை சொல் வெவ்வேறு வார்த்தைகளின் உருவில், அதனின் இருப்பை, நம் கண்களின் வழியில் வாசகர்களின் நெஞ்சத்திற்கு உணர்த்திக் கொண்டே இருக்கும்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

நூல் அனுபவம்

கவிதை நூல்

அன்பே சமூகத்தை ஆளட்டும்! அதனால் மனிதம் தழைக்கட்டும்!
"முகிழ்நகை" உலகத்தின் அகத்தில் தன் முத்திரையைப் பதிக்கட்டும்!




கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# தம்பி ஸ்ரீனிவாசன்

## கட்டுரை

தொண்டுள்ளம் கொண்ட துணைத் தலைவர் என்று குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவால் பாராட்டப்பட்டவர் சிறார் எழுத்தாளர் தம்பி சீனிவாசன். வடஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் என்ற ஊரில் 15 ஜூலை 1930 அன்று பிறந்தவர். சாகித்திய அகாதமியின் புத்தகத் துறைப் பதிப்பாளராக சென்னையில் பணியாற்றினார். குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் சிறப்பாக செயல்பட்டவர். இவர் எழுதிய "தங்கக் குழந்தைகள்" என்ற நூல் மத்திய அரசின் பரிசினைப் பெற்றது.

இவர் "பத்திரிகையின் கதை", "புத்தகம் தயார்", "யானையில் பறந்தவன்", "எட்டுத்திக்குக் கதைகள்", "பயத்தை வென்ற ராமன்" முதலான பல சிறார் நூல்களைப் படைத்த பெருமைக்குரிய எழுத்தாளர். இவருடைய "சிவப்பு ரோஜாப்பூ" என்ற பாடல் தொகுதியினை நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டுள்ளது. மேலும் "குட்டி யானை பட்டு", "யார் கெட்டிக்காரர்", "ஜானுவும் நதியும்", "வேடன் மகன்" போன்ற மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளார். "தேடிப்பார்" மற்றும் "யார் கெட்டிக்காரர்?" போன்ற நூல்களையும் நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டுள்ளது.

அன்றொரு நாள் ஆடுகையில்
நான்இழந்த பந்து
பின்னொரு நாள் தேடுகையில்
மீண்டும் வந்த துண்டு

அன்றொரு நாள் பாடுகையில்
அடி மறந்த பாடல்
பின்னொரு நாள் நினைவினிலே
மீண்டும் வந்த துண்டு

அ வில்சன், இதழாசிரியர்

# தம்பி ஸ்ரீனிவாசன்

## கட்டுரை

அன்றொரு நாள் போட்டியிலே
நான் இழந்த நண்பன்
பின்னொரு நாள் நினைவினிலே
மீண்டும் வந்த துண்டு

அன்றொரு நாள் சோம்பலிலே
நான் இழந்த காலம்
என்னருமை வாழ்க்கையிலே
இன்னொரு நாள் வருமா ?

"சிவப்பு ரோஜாப்பூ" நூலில் இருந்து

பிரபல ஓவியர் கோபுலு அவர்களின் சித்திரங்களோடு கவிதைத் தொகுதியை வெளியிட்டவர். குழந்தை எழுத்தாளர் சங்க மலர் தயாரிப்பில் இவருக்கு பெரும் பங்கு உண்டு. இவர் "பாரதி" என்ற இதழினை சிறிது காலம் நடத்தினார்.

குழந்தை இலக்கியம் குறித்த யுனெஸ்கோ கருத்தரங்கில் பங்கு கொண்டவர். குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் செயலாளராகவும் பின்னர் துணைத் தலைவராகவும் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

நாளை

# நமதே

## முடிவே இல்லாத

## ஒரு வார்த்தை

## முயற்சி



Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com